**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 123/2025**

**வாதி தரப்பு சாட்சி–1 இமயமணிவாசகம்(எ)மாணிக்கவாசகம்–**திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், மாணிக்கவாசகம் என்பதும் இமயமணிவாசகம் என்பதும் ஒருவர்தான் என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ITI முடித்துள்ளேன். எனது பள்ளி மாற்றுச் சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பள்ளி மாற்றுச்சான்றிதழில் இமயமணிவாசகம் என கண்டுள்ளது. எனது ஆதார் அட்டையில் இமயமணிவாசகம் என்றுதான் உள்ளது. எனது வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றிலும் இமயமணிவாசகம் என்றுதான் உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணம் வாங்கும் போது எனது பெயரை தவறுதலாக மாணிக்கவாசகம் என சொல்லிவிட்டார்கள்.

2) எனது பெயர் வா.சா.ஆ.2 ஆவணத்தில் தவறாக உள்ளதை திருத்தம் செய்ய எனது கிரையதாரர்கள் மூலம் திருத்தல் பத்திரம் செய்திருக்கலாம் என்றால் அதற்கு நான் முயற்சி செய்யவில்லை, தற்போதுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பிறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை, நான் எங்கு பிறந்தேன் என்றால் மருத்துவமனையில் பிறந்தேன். மருத்துவமனையில் பிறந்திருந்தால் பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கும் என்றால் எனக்கு வழங்கவில்லை. எனது தவறான பெயரை மாற்ற அரசிதழில் பணம் செலுத்தி எனது பெயரை மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. எனது பெயரை மாற்ற அரசிதழில் விளம்பரம் கொடுத்து மாற்றிக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்றும், அவ்வாறு செய்யாமல் இவ்வழக்கு தாக்கல்

செய்தது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வருவாய்துறையில் இரண்டு நபர்களும் ஒருவரே என சான்று வழங்குவது நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அரசு அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டிய அறிவிப்பை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வருவாய்துறையில் மனு செய்து அவர்கள் நீதிமன்றத்தை நாடிக்கொள்ளும்படி ஏதாவது சொன்னார்களா என்றால், நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. சார்பதிவாளருக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் மூலம் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 123/2025**

**வாதி தரப்பு சாட்சி–2 சுந்தரமூர்த்தி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரமூர்த்தி | கிராமம் | |
| த/பெ / க/பெ. | சாத்தவேளார் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 48 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வா.சா.1 எனது தம்பி. எனக்கும் எனது தம்பிக்கும் பிறப்பு சான்றிதழ் இல்லை. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.2 ல் மாணிக்கவாசகம் என்றும், எனது தம்பியின் பள்ளிச் சான்றிதழ்களில் இமயமணிவாசகம் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. இரு பெயரும் எனது தம்பியுடையதுதான் என இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வருவாய்துறையில் எனது தம்பி மனு ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. முறையாக சட்ட நடவடிக்கைகளை கடைபிடிக்காமல் இவ்வழக்கை எனது தம்பி தாக்கல் செய்துள்ளார் என்றும், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –** இல்லை

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**